# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

(அறிவிக்கை எண். த.மி.ஒ.ஆ/மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள்
ஒழுங்குமுறை விதி/16/ 5, 08–06–2009 நாளிட்டது )

(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 86(1) (e) பிரிவுடனும் மற்றும் 181ஆம் பிரிவுடனும் சேர்த்துப் படிக்கப்படும் 61 (h) பிரிவின்படி, 2008ஆம் ஆண்டு பிப்ரவரி 27ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் 2008ஆம் ஆண்டு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் மின்திறன் ஒழுங்குமுறைவிதிகளைக் குறித்துரைத்துள்ளது மற்றும் வெளியிட்டுள்ளது என்பதாலும்,

மற்றும் அது, மேலேயுள்ள ஒழுங்குமுறைவிதிகளைத் திருத்துவதற்கு ஒருசில திருத்தங்களைப் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும் மற்றும் அத்தகைய திருத்தங்கள் முந்தைய வெளியீட்டின் வரையறைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க அத்தகைய முந்தைய வெளியீடு செய்யப்பட்டுள்ளபடியாலும்,

தற்போது, அதற்காக, மேற்சொன்ன 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 86 (1) (e) பிரிவுடனும் மற்றும் 181ஆம் பிரிவுடனும் சேர்த்துப் படிக்கப்படும் 61 (h) பிரிவின்படி வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப்பிற அதிகாரங்களையும் செலுத்தி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன்மூலம் 2008ஆம் ஆண்டு பிப்ரவரி 8ஆம் நாளிட்ட அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ/மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள் ஒழுங்குமுறைவிதி/16/1–இன்படி பிறப்பிக்கப்பட்ட மற்றும் 2008ஆம் ஆண்டு பிப்ரவரி 27ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI –பிரிவு–2ல் வெளியிடப்பட்ட 2008ஆம் ஆண்டு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் மின்திறன் ஒழுங்குமுறைவிதிகளுக்கு பின்வரும் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகளைச் செய்கிறது :–

## திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள்

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :**

a) இந்த ஒழுங்குமுறைவிதிகள், 2009ஆம் ஆண்டு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் மின்திறன் (இரண்டாம் திருத்தம்) ஒழுங்குமுறைவிதிகள் என்று கூறப்படும்.

b) இவை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

**2. முதன்மை ஒழுங்குமுறைவிதியின் 3ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம் :**

முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 3ஆம் ஒழுங்குமுறைவிதியின் (3)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில், இரண்டாம் வரம்புரையில், “இடைத்தள மின் தொடர்களின் முழுமையான செலவுத்தொகை’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக “ இடைத்தள மின் தொடர்களின் தேய்மான (மதிப்புக்குறைக்கப்பட்ட) செலவுத் தொகை ’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

(இரா. பாலசுப்பிரமணியன்)
செயலாளர்